# TRB – P.G. ASST.

# HISTORY - (UNIT –V)

## ONLINE / OFFLINE

## CLASSES

CALL FOR SAMPLE MATERIALS FOR OTHER UNITS & TESTS

8015513365

PG – TRB STUDY MATERIALS

FOR

- TAMIL
- ECONOMICS
- ENGLISH
- PHYSICS
- CHEMISTRY
- ZOOLOGY
- BOTANY
- MATHS
- COMPUTER SCIENCE
- HISTORY

## KARIKUDI VIDYA SRI COACHING CENTRE

TRB – P.G. ASST –HISTORY

www.Padasalai.Net

# TRB – P.G. Asst. – HISTORY

## TRB SYLLABUS

# VIDYA SRI

## COACHING CENTRE

4, Maharishi School Near, Income Tax Stop
Karaikudi – 630 001

9442738785, 8015513365
www.vidyasriacademy.com




# ONLINE – CALL

# VIDYA SRI

## COACHING CENTRE

4, Maharishi School Near, Income Tax Stop

# PG – TRB HISTORY

# UNIT - V

## 1857—ஆம் ஆண்டு பெரும்புரட்சி (அ) சிப்பாய்க் கலகம் (அ)

## முதல் இந்திய சுதந்திரப் போர்

### ஆங்கிலேயருக்கு எதிரான முந்தைய புரட்சிகள்:

- இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் இந்து சன்னியாசிகளும், இஸ்லாமிய துறவிகளும் ஆங்கிலேயரை எதிர்த்தனர்.
- தென்னிந்தியாவில் பாளையக்காரர்களான பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், வேலுத்தம்பி ஆகியோர் ஆங்கிலேயருக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.
- 1806—ல் நடந்த **“வேலூர் புரட்சி”** யானது ஆங்கிலேயரின் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் இந்தியர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை உணர்த்தியது.
- 1824—ல் ஏற்பட்ட **“பேரக்பூர் புரட்சி”** யும் ஆங்கிலேயருக்கு எதிரான முக்கிய புரட்சியாகும்.

### 1857—ஆம் ஆண்டு பெரும்புரட்சி:

[இப்புரட்சி **“கானிங்பிரபு”** காலத்தில் நடைபெற்றது]

### காரணங்கள்:

SAMPLE PDF-9442738785t
www.Padasalai.Net

## அரசியல் காரணங்கள்

- வெல்லெஸ்லியின் **துணைப்படைத்திட்டம்** இந்திய அரசர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.
- டல்ஹௌசிப் பிரபுவின் **வாரிசு இழப்புக் கொள்கை** (Doctrine of Lapse) மூலம் 8 நாடுகள் நியாயமின்றி ஆங்கிலேயர் இணைத்தனர்.
- இரண்டாம் பாஜிராவின் வளர்ப்பு மகன் **நானா சாகிப்பின்** ஓய்வூதியம் நிறுத்தப்பட்டது.
- ஜான்சிராணி இலட்சுமிபாய்க்கு தத்தெடுக்கும் உரிமை மறுக்கப்பட்டது.
- அயோத்தி நவாப் **"வசித் அலிஷா"** வை பதவியிலிருந்து நீக்கி அயோத்தியை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர்.

## நிர்வாகக் காரணங்கள்

- நீதிமன்றங்களில் பாரசீக மொழிக்குப் பதிலாக ஆங்கிலம் புகுத்தப்பட்டதை இந்தியர்கள் விரும்பவில்லை.
- ஆங்கிலேயர் நீதி வழங்கும் முறை அதிக செலவுடையதாகவும் இயந்திரத்தன்மை கொண்டதாகவும் இருந்தது.
- நிலவரி முறையினால் பிரபுக்களும், குடியானவர்களும் பாதிக்கப்பட்டனர்.

## பொருளாதாரக் காரணங்கள்:

- செல்வச் சுரண்டல், தொழில் நலிவு, அதிகரிக்கப்பட்ட நிலவரி ஆகியவற்றால் இந்தியர்களின் பொருளாதாரம் சீர்குலைந்தது.
- ஜமீன்தார்களும், குறுநில மன்னர்களும் தங்கள் பதவியை இழந்ததால் அவர்களிடம் பணிபுரிந்த கைவினைஞர்களும், கலைஞர்களும், நெசவாளர்களும் ஆதரவு இழந்தனர்.
- 1833—ல் இந்தியாவில் புதிய பண்ணை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி ஆங்கிலேயர்கள் புதிய பண்ணைகளை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதனால் குடியானவர்கள் எண்ணற்ற துன்பங்களுக்கு ஆளானார்கள்.
- 19—ம் நூற்றாண்டின் முதல் பாதியில் ஏற்பட்ட 7 பஞ்சங்கள் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்தது.

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net

KARAKUDI VIDYA SRI SAMPLE MATERIALS
447 PASSED TILL DATE 8015513365 PG TRB / TET PAPER I & II / TNPSC / PSYCHOLOGY
www.vidyasriacdaemy.com




**சமூகக் காரணங்கள் :ுர்யு**

- இந்தியர்களைத் தம்மைவிட தாழ்ந்தவர்களாகவே ஆங்கிலேயர் நடத்தினர்.

- இந்தியர்கள் தொடர்வண்டியில் முதல் வகுப்பில் பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை.
- வேகமாகப் பரவிய மேல்நாட்டுப் பண்பாடும், ஆங்கிலக் கல்வியும் சீர்திருத்தங்களும் இந்தியப் பழமை வாதிகளைப் பீதியடையச் செய்தன.
- சீர்திருத்தங்கள் (சதி, பெண் சிசுக்கொலை, விதவை மறுமணம்) தங்களது சமய பழக்கவழக்கங்களில் தலையிடுவதாக இந்துக்கள் கருதினர்.

**சமயக் காரணங்கள்:**

[ஆங்கிலப் பாராளுமன்ற உறுப்பினரான **"ஆர்.டி. மேங்கல்ஸ்"** என்பவர், "ஒவ்வொரு ஆங்கிலேயரும் ஒரு இந்தியரையாவது கிறித்துவ சமயத்திற்கு மாற்ற முயற்சி எடுக்க வேண்டும். மேலும் கிறித்துவின் பதாகை ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை வெற்றிகரமாக பறக்க வேண்டும்" என்று வெளிப்படையாக அறிவித்தார்].

- இந்துக்கள் மதம் மாறினாலும் சொத்துரிமை உண்டு என்று ஆங்கிலேயர் சட்டம் கொண்டு வந்தனர்.
- இந்த அறிவிப்பு இந்திய மக்களிடையே (இந்து, முஸ்லீம்) **"இந்தியா கிறித்துவ நாடாக மாறிவிடுமோ"** என்ற அச்சத்தை ஏற்படுத்தியது.
- கோயில்களுக்கும் மசூதிகளுக்கும் சொந்தமான நிலங்களின் மீது ஆங்கிலேயர் விதித்த வரி மக்களின் சுய உணர்வினை பாதித்தது.

**இராணுவக் காரணங்கள்:**

- இந்தியச் சிப்பாய்களுக்கு ஆங்கிலேயர் சிப்பாய்களை விட குறைவான சம்பளம் வழங்கப்பட்டது.
- பதவி உயர்வு வழங்கப்பட வில்லை.
- இந்தியச் சிப்பாய்கள் தங்களது மத வழக்கப்படி நெற்றியில் திலகமிடுதல், தாடி வளர்த்தல், தலைப்பாகை அணிதல் போன்றவைகள் தடுக்கப்பட்டன.
- 1856—ல் கானிங்பிரபு கொண்டு வந்த **"பொது இராணுவப் பணியாளர் சட்டம்"** (The General Services Enlistment Act) இந்தியச் சிப்பாய்களிடையே

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



வெறுப்பை ஏற்படுத்தியது (தேவைப்பட்டால் இந்தியர்கள் கடல் கடந்து சென்று பணியாற்ற வேண்டும் என்பது).

- இந்திய படை வீரர்களுக்கு உயர்பதவி **சுபேதார்** பதவி ஆகும். ஆனால் ஊதியம் புதிதாய் சேர்ந்த ஆங்கிலேயர்களை விட குறைவாகும்.

**உடனடிக் காரணங்கள்:**

- படை வீரர்களுக்கு வழங்கப்பட்ட புதிய என்பீல்டு ரக துப்பாக்கியின் தோட்டாக்களில் பசு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்டிருந்தது. (உபயோகிப்பதற்கு முன் அதன் மேலுறைகளைப் பற்களால் கடித்து திறக்க வேண்டும்)
- பசு இந்துக்களின் புனித விலங்காகவும், பன்றி முஸ்லீம்களின் வெறுக்கத்தக்க விலங்காகவும் இருப்பதால் இவ்விருவரும் தங்கள் மதத்தை இழிவுபடுத்தும் செயல் என்று கருதி தோட்டாக்களை பயன்படுத்த மறுத்தனர்.
- 1857, மார்ச் 29—ல் கல்கத்தாவிற்கு அருகில் **"பேரக்பூர்"** என்னுமிடத்தில் வங்காளப் படைப்பிரிவைச் சேர்ந்த "மங்கள் பாண்டே" என்ற இளம் வீரர் தோட்டாவைப் பயன்படுத்த மறுத்து தனது மேலதிகாரியை (லெப்டினன் பாக்) சுட்டுக் கொன்றார். இவர் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். இருப்பினும் புரட்சி பல்வேறு இடங்களில் பரவியது.
- **(முதலில் பேரக்பூரில் புரட்சி வெடித்தது)**

**புரட்சியின் போக்கு:**

- 1857, ஏப்ரல் மாதம் **"மீரட்டில்"** வெளிப்படையாகப் புரட்சியில் ஈடுபட்டனர். மே மாதம் 10—ஆம் நாள் பெரும்புரட்சியை ஏற்படுத்தினர்.
- மே மாதம் 12ம் நாள் டெல்லியைக் கைப்பற்றி பெயரளவுக்கே பேரரசராக இருந்த இரண்டாம் பகதுர்ஷா (கடைசி முகலாயப் பேரரசர்) என்பவரை இந்தியாவின் பேரரசராக அறிவித்தனர்.

**டெல்லி:**



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- டெல்லியில் பகதூர்ஷா தலைமையேற்று புரட்சியை நடத்தினார். உறுதுணையாக **“பகத்கான்”** என்ற தளபதி இருந்தார்.
- இறுதியில் **“நிக்கல்சன்”** என்பவரால் புரட்சி அடக்கப்பட்டு டெல்லி மீட்கப்பட்டது.
- முகலாயமன்னர் பகதூர்ஷா கைது செய்யப்பட்டு ரங்கூனுக்கு (பர்மா) அனுப்பப்பட்டார். 1862—ல் அவர் அங்கேயே இறந்தார்.

**<u>கான்பூர்:</u>**

- கடைசி பேஷ்வா, 2—ஆம் பாஜிராவின் தத்துப் பிள்ளையான **“நானா சாகிப்”** கான்பூர் கலகத்திற்கு தலைமை தாங்கினார்.
- நானாசாகிப்பிற்கு உறுதுணையாக இவரது படைத்தளபதி அசிமுல்லா மற்றும் **“தாந்தியா தோப்”** இருந்தார்.
- பிரிட்டிஷ் தளபதி **“சர் காலின் காம்பெல்”** என்பவரால் கான்பூர் மீட்கப்பட்டது.
- நானாசாகிப் நேபாளத்திற்கு தப்பி ஓடினார். இவரது முடிவு புதிராகவே உள்ளது.

**<u>மத்திய இந்தியா:</u>**

- மத்திய இந்தியாவில் ஜான்சியைச் சேர்ந்த ராணி லட்சுமிபாய் தலைமை வகித்தார். இவரும் கான்பூரில் இருந்து தப்பி வந்த தாந்தியா தோப்பும் சேர்ந்து **“குவாலியரைக்”** கைப்பற்றினர். இருப்பினும் **“ஹக்ரோஸ்”** (Huge Rose) என்பவரால் புரட்சி அடக்கப்பட்டது.
- ராணி போர்க்களத்திலேயே மரணமடைந்தார்.
- தாந்தியாதோப் சிறைப்பிடிக்கப்பட்டு தூக்கிலிடப் பட்டார். (கான்பூர் படுகொலை குற்றத்திற்காக)

பரெய்லி

- ரோகில்கண்டின் தலைநகரான பரெய்லியில் படைவீரர்கள் புரட்சி செய்தனர்.

SAMPLE PDF - 9442738785
www.Padasalai.Net

- அவர்கள் தங்கள் தலைவனை தங்கள் பகுதிக்கு ஆளுநராக அறிவித்தனர்.

**பீகார்:**

- பீகாரில் உள்ள ஆராவில் கன்வர்சிங் (ஜகதீஸ்பூரின் நிலப்பிரபு) தலைமை தாங்கினார்.
- வில்லியம் டெய்லர் என்பவர் புரட்சியை அடக்கினார்.
- போரில் காயமடைந்த இவர் ஜகதீஷ்பூரில் இறந்தார்.

**லக்னோ:**

- லக்னோவில் அயோத்தியின் அரசி பேகம் **"ஹஸ்ரத்மகால்"** தலைமை தாங்கினார்.
- **"சர் காலின் காம்பெல்"** என்பவர் இப்புரட்சியை அடக்கினார் (கூர்க்கா படையின் உதவியுடன்)
- அயோத்தி பேகம் நேபாளத்தில் தஞ்சமடைந்தார்.

**தோல்விக்கான காரணங்கள்:**

- ஒற்றுமையின்மையும், திட்டமிடாமையும் முக்கிய காரணம் ஆகும்.
- புரட்சியாளர்கள் பொதுவான ஒரு நோக்கமின்றி வெவ்வேறு நோக்கத்துடன் போரிட்டனர்.
- நாடெங்கும் பரவாமல் வடக்கு, மத்தியப் பகுதியில் மட்டுமே புரட்சி நடைபெற்றது. வடமேற்கு மற்றும் தென்னிந்தியாவில் பரவவில்லை.
- சீக்கியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் கூர்க்காக்கள் ஆங்கிலேயருக்கு உதவி செய்தனர்.
- ஆங்கிலேயரின் நவீன போர்க்கருவிகளும், போர் யுக்தியும் இந்தியர்களிடம் இல்லை.
- சரியான தலைமைப் பொறுப்பு இந்தியர்களிடம் இல்லை. நானாசாகிப், ஜான்சிராணி, தாந்தியாதோப் போன்றோர் சிறந்த வீரர்களேயன்றி சிறந்த தளபதிகள் அல்ல.
- படித்த இந்தியர்கள் புரட்சியை ஆதரிக்கவில்லை.

- 1857, மே 31ல் திட்டமிடப்பட்டது. ஆனால் முன்னரே துவங்கியது.

**விளைவுகள்:**




- ஆங்கில கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சி முடிவுக்கு வந்தது.
- இந்திய நிர்வாகம் இங்கிலாந்து அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் வந்தது.
- 1858—ல் ஒரு சிறப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின்படி கட்டுப்பாட்டுக்குழுவும் (Board of Control) மற்றும் இயக்குநர் குழுவும் (Board of Directors) கலைக்கப்பட்டது.
- இவற்றுக்குப் பதிலாக இந்திய செயலாளரும், அவருக்கு உதவி செய்ய 15 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியக் குழுவும் அமைக்கப்பட்டது.
- இந்தியாவின் தலைமை ஆளுநர் (Governor General) பதவி பெயர் மாற்றப்பட்டு அரசப்பிரதிநிதி (Viceroy) என்றழைக்கப்பட்டது. (அதன்படி கடைசி தலைமை ஆளுநரும் முதல் வைசிராயுமாக **“கானிங் பிரபு”** செயல்பட்டார்.)

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



- டல்ஹௌசியின் வாரிசு இழப்புக் கொள்கை கைவிடப்பட்டது. இந்திய மன்னர்களுக்கு தத்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டது.
- இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான விதை இப்புரட்சியின் மூலம் விதைக்கப்பட்டது.

## விக்டோரியா மகாராணி பேரறிக்கை (Queen Victoria's Proclamation - 1858)

- **1858** ஆம் ஆண்டு **நவம்பர் 1ம்** தேதி இந்தியாவின் கடைசி தலைமை ஆளுநரும் முதல் வைசிராயுமான **கானிங்பிரபு அலகாபாத்தில்** நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் இப்பேரறிக்கையை வெளியிட்டார்.
- இது மக்களின் மகா சாசனம் (உரிமை சாசனம்) (Magna Carta) என்று அழைக்கப்படுகிறது.
- இதன்படி
  1) இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை இனி இங்கிலாந்து அரசி நேரடியாக மேற்கொள்வார்
  2) அவருக்கு பதிலாக அவரது பிரதிநிதி இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை மேற்கொள்வார். அதன்படி கானிங்பிரபு அரசப்பிரதிநிதி ஆனார்.

**Extra :—**

- "பழம்பெருமை கொண்ட ஒரு நாட்டை எங்கிருந்தோ வந்த ஒரு சிறு கூட்டம் ஆட்சி செய்வது என்னை மிகுந்த ஆத்திரமடையச் செய்கிறது" — Discovery of India – என்ற நூலில் நேரு எழுதியது.

- "1857—ல் நடந்த புரட்சியில் ஈடுபட்டவர்களில் மிகச் சிறந்தவராகவும், வீரமிக்கவராகவும் திகழ்ந்தவர் இராணி இலட்சுமிபாய் ஆவார்" — **ஆங்கில வரலாற்றாசிரியர்களின் கூற்று**
- 1857— இப்புரட்சி "படைவீரர் கலகமாகும்" — ஆங்கில வரலாற்றாசிரியர்கள்
- 1857— இப்புரட்சி "முதல் இந்திய சுதந்திரப் போராகும்" — இந்திய வரலாற்றாசிரியர்கள்
- "First War of Independence" – புத்தகத்தை எழுதியவர் வீர சவர்க்கார் (V.D. சவர்க்கர்) ஆவார்.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- "Sepoy Mutimy" – புத்தகத்தை எழுதியவர் R.C. Majumdar.
- புரட்சியில் கலந்து கொள்ளாத அரசுகள்:
  1. ஐதராபாத் நிஜாம் 2. பாட்டியாலா மன்னர் 3. குவாலியரின் சிந்தியா

## 19-ம் நூற்றாண்டின் சமூக சமய சீர்திருத்த இயக்கம்

### பிரம்ம சமாஜம் 1828 – (இராஜாராம் மோகன்ராய்)

- 19ம் நூற்றாண்டில் இந்தியாவில் சமயத்திலும் சமூகத்திலும் இருந்த சீர்கேடுகளை நீக்க படித்த இளைஞர்கள் முன் வந்தனர்.
- மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல், சமத்துவம், சுதந்திரம், மனிதத் தன்மை போன்றவை அவர்களைக் கவர்ந்தன. எனவே தங்கள் பண்பாட்டில் உள்ள குறைகளை நீக்க முயன்றனர்.
- 19—ம் நூற்றாண்டில் ஏற்பட்ட இவ்வியக்கம் **"இந்திய மறுமலர்ச்சி இயக்கம்"** என்று அழைக்கப்படுகிறது. ராஜாராம் மோகன்ராய் இவ்வியக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.
- ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தில் இராஜாராம் மோகன்ராய் 1805 முதல் 1814 வரை பணியாற்றினார்.
- வங்காளத்தைச் சேர்ந்த அந்தணர் பிரிவைச் சேர்ந்த மோகன்ராயால் தொடங்கப்பட்டது.
- **1815—ல் ஆத்மிய சபையை** நிறுவினார். அதுவே **1828—ல் பிரம்மசமாஜமாக** வளர்ச்சியுற்றது.
- முகலாய மன்னர் இரண்டாம் அக்பர் இராம்மோகனுக்கு **ராஜா என்ற பட்டத்தை** வழங்கிய பின்பு ராஜாராம் மோகன்ராய் என்று அழைக்கப்பட்டார்
- இராஜாராம் மோகன்ராய் — வில்லியம் **பெண்டிங்பிரபு** இருவரும் இணைந்து சதி என்னும் உடன்கட்டை ஏறுதலை தடைசெய்தனர். (1829)
- இராஜாராம் உருவாக்கிய பிரம்மசமாஜம் குழந்தைத்திருமணத்தையும் பலதாரமணத்தையும் எதிர்த்தது. பிரம்மசமாஜ தலைவர்களில் ஒருவரான **கேசவ சந்திர சென்னின்** முயற்சியால் 1872—ல் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி குழந்தைத் திருமணம், பலதார மணம் ஒழிக்கப்பட்டது.

- **கேசவசந்திர சென்னும், தேவேந்திரநாத் தாகூரும்** பிரம்மசமாஜத்தில் புகழ்பெற்றவர்கள்.
- **இயேசு கிறிஸ்துவின் கட்டளைகள்** (Precepts of Jesus Christ), **அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி** (The Guide to Peace and Happiness) என்ற நூல்களை எழுதினார்.
- **“ஒரே கடவுள்”** என்ற கொள்கையின் அடிப்படையில் **“பொது சமயத்தில்”** நம்பிக்கை கொண்டிருந்தார்.
- 

**ஆரியசமாஜம் 1875 (சுவாமி தயானந்த சரசுவதி)**

- தோற்றுவித்தவர் குஜராத் அந்தணரான **தயானந்த சரஸ்வதி.**
- கத்தியவார் மாநிலத்தில் **மூர்வி** என்னுமிடத்தில் பிறந்தார்.
- இளமையில் இவர் **மூல் சங்கர்** என்றழைக்கப்பட்டார்.
- **வராஜ்னந்தரின்** சீடராவார்.
- **வேதங்களை நோக்கிச் செல்** (Go Back to the Vedas) — இவரது தாரக மந்திரம் **“சத்தியனந்த பிரகாஷ்”** என்பது வேதங்களைப் பற்றிய இவரது நூலாகும்.
- இவர் தொடங்கிய **“சுத்தி இயக்கம்”** மற்ற மதத்திற்குச் சென்றவர்களை மறுபடியும் இந்து மதத்திற்கு வர வழைக்க பயன்படுத்திய இயக்கம்
- தயானந்த சரஸ்வதி இந்து சமயத்தின் **மார்டின் லூதர்** (ஜெர்மனி) என அழைக்கப்படுகிறார்
- DAV Schools — Dayanand Anglo Vedic Schools. லாகூரில் நிறுவப்பட்டது.
- லாலா லஜபதிராய், லாலா ஹன்ஸ்ராஜ், பண்டித குருதத் ஆகியோர் தயானந்தரின் ஆரியசமாஜத்தை பரப்பிய சீடர்கள்.

SAMPLE PDF 9442738785
www.Padasalai.Net




- **பாலகங்காதரதிலகர், கோபலகிருஷ்ணகோகலே** – ஆரிய சமாஜத்தின் மீது ஈடுபாடு கொண்டவர்கள்.
- **தயானந்த சரஸ்வதியின் முக்கிய வாசகங்கள்:**
  - சுதேசம்
  - இந்தியா இந்தியருக்கே
  - வாய்மையே வெல்லும் பொய்மை அல்ல என்று பொருள்படும், "சத்தியமேவ செயதே, நாஅன்ரிதம்" போன்றவை தயானந்தரின் முக்கியமான வாசகங்கள் (Motto) ஆகும்.

**பிரார்த்தனை சமாஜம்:**

- 1867—ல் டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங் என்பவரால் பம்பாயில் பிரார்த்தனை சமாஜம் தோற்றுவிக்கப்பட்டது.
- இது பிரம்ம சமாஜத்திலிருந்து உதயமானது.
- நீதிபதி M.G. ரானடே, பண்டார்க்கர் இருவரும் இதில் சேர்ந்து வலிமை சேர்த்தனர்.
- நீதிபதி ரானடே "**தக்காண கல்விக் கழகத்தை**" போற்றி வளர்த்தார்.

**<u>பிரம்மஞானசபை 1875</u>**

(Theosophical society)

திியோஸ் = கடவுள்: சோபாஸ் = அறிவு

கடவுளைப்பற்றிய அறிவு (கிரேக்கம்)

பிரம்மஞானம் (சமஸ்கிருதம்)

- முதன்முதலில் பிளாவாட்ஸ்கி (ரஷ்யா), கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் (H.S. ஆல்காட்) இருவரும் சேர்ந்து 1875ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொடங்கினர்
- 1882—ல் சென்னை அடையாரில் தொடங்கப்பட்டு பின்பு அதுவே தலைமையிடமாக மாறியது.
- **கொள்கைகள்:** 1. சகோதரத்துவம்,

2. பண்டைய சமயம், தத்துவம், அறிவியலைக்கற்றல்.

3. இயற்கை நியதிகளை அறிந்து.

மனிதனிடம் தெய்வீக சக்திகளை வளர்த்தல்.

- 1893ல் இதன் அங்கத்தினராக அன்னிபெசன்ட் இந்தியா வந்தார். இவர் காசியில் (பனாரசு) தொடங்கிய மத்திய இந்துக் கல்ரி பனாரசு இந்து பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.
- இவர் தொடங்கிய செய்தித்தாள் **நியூ இந்தியா, காமன் வீல்** போன்றவைகள் பிரம்மஞான கொள்கைகளைப் பரப்பியது.
- இவரின் தன்னாட்சி இயக்கம் (Home Rule Movement) இந்திய தேசிய இயக்கத்திற்கு உத்வேகத்தை அளித்தது.
- இந்திய தேசிய காங்கிரஸின் முதல் பெண்மணி ஆவார். (அன்னிபெசண்ட்)

SAMPLE PDF - 9442738785
www.Padasalai.Net

## இராமகிருஷ்ண இயக்கம் 1897 (சுவாமி விவேகானந்தர்)

- ❖ இராமகிருஷ்ண பரமஹம்சர் 1836—ல் மே மாதம் 1ந் தேதி பிராமண குடும்பத்தில் பிறந்தார்.
- ❖ கல்கத்தாவிற்கு அருகில் தட்சிணேசுவர காளிகோயில் பூசாரியாக இராமகிருஷ்ணர் இருந்தார். துணைவியார் பெயர் சாரதாமணி தேவி ஆவார்.
- ❖ **"மனிதருக்குச் செய்யும் பணி கடவுளுக்குச் செய்வதாகும்"** என்று **இராமகிருஷ்ணர்** கூறினார்.
- ❖ நரேந்திர தத்தா என்ற இயற்பெயர் கொண்ட விவேகானந்தர் இவரின் முக்கியச் சீடர் ஆவார்.
- ❖ "ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் செய்யும் பணியே கடவுளுக்குச் செய்யும் மிகப்பெரிய பணி" என்று விவேகானந்தர் கூறினார்.
- ❖ 1893ல் அமெரிக்காவில் உள்ள **சிக்காக்கோ** நகரில் இவர் உரையாற்றிய, **"இவ்வுலகச் சகோதர சகோதரிகளே"** (Brothers and sisters of this universe) என்ற வாசகம் மிகவும் புகழ்பெற்றதாகும்.
- ❖ 1897ல் கொல்கத்தாவிற்கு அருகிலுள்ள **பேலூரில் இராமகிருஷ்ண மடத்தை** நிறுவினார். மனித இனத்திற்கு சேவை செய்வதே இவ்வியக்கத்தின் குறிக்கோளாகும்.
- ❖ **சுந்தரவனப் பகுதியில்** (W.B) சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் (Photo Voltaic (P.V) lighting System தோன்றுவதற்கு முக்கிய பங்கு வகித்தது.
- ❖ **"துறத்தல்"** மற்றும் **"சேவை"** இரண்டுமே நவீன இந்தியாவின் இரு கொள்கைகளாக இருக்க வேண்டும் என்று கூறினார்.
- ❖ **ஜீவாவே (உயிர்) சிவா** என்ற நம்பிக்கையின் அடிப்படையில் **மக்கள் பணியே கடவுள் பணி** என்று கூறி தொண்டாற்றினர்.

## முஸ்லீம் இயக்கங்கள்:

முகமதியர் இலக்கியக்கழகம் 1863ல் **நவாப்அப்துல்லத்தீப்** தொடங்கினார். இஸ்லாமியரிடையே கல்வியைப் பரப்புவதே இவ்வியக்கத்தின் கொள்கையாகும்.

SAMPLE PDF-9442738785
www.Padasalai.Net

## அலிகார் இயக்கம் :

- இவ்வியக்கம் **சர் சையது அகமது கானால்** தொடங்கப்பட்டது.
- இவர் 1857ல் ஆங்கில அரசாங்கத்தில் நீதித்துறை அலுவலராக இருந்தார். அதனால் இவர் காங்கிரஸை எதிர்த்தார்.
- எனினும் இந்து முஸ்லீம் ஒற்றுமையை இவ்வியக்கம் வலியுறுத்தியது இவரின் மிகப்பெரிய சாதனை.
- இவர் 1875ல் தொடங்கிய **முகமதியின் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி** பின்னாளில் **அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாக** வளர்ந்தது. இவர் தொடங்கிய பத்திரிகை தாஹ்முல்—உத்—அக்லாக். (ஒழுக்க சீர்திருத்தம்) ஆகும்.

## சீக்கிய சீர்திருத்த இயக்கங்கள்: (பஞ்சாப்)

- பாபா தயாள்தாஸ் என்பவர் "**நிரங்காரி**" (கடவுள் உருவமற்றவர்) இயக்கத்தை தோற்றுவித்தார்.
- பாமா ராம்சிங் "**நாம்தாரி**" இயக்கத்தை நிறுவினார்.
- 1870—ல் லாகூர் மற்றும் அமிர்தசரஸில் தோற்றுவிக்கப்பட்ட "**சிங் சபாக்கள்**" சீக்கிய சமுதாயத்தை சீர்திருத்த முற்பட்டன.
- 1892—ல் அமிர்தசரஸில் **கால்சா** கல்லூரி நிறுவப்படுவதற்கு இந்த சபாக்கள் துணை புரிந்தன.

## பார்சி இயக்கம்:

- பார்சி இன மக்களிடையே சமயசமூகச் சீர்திருத்தங்களை பரப்புவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் **தாதாபாய்நௌரோஜி** மற்றும் **நௌரோஜி பூர்டுன்ஜியும்** (Navoroji Furdoonji) ஆவர்.
- இருவரும் இணைந்து பார்சி இன மக்களின் முன்னேற்றத்திற்காக தொடங்கிய பத்திரிகை **ராஸ்த் கோப்தார்** ஆகும்.
- மற்றும் ஒரு முக்கிய பார்சி இன சீர்திருத்த வாதி **சோரப்ஜி பெங்காலி** என்பவராவார்.

## இளம் வங்காள இயக்கம்:

- இவ்வியக்கத்தை **ஹென்றி விவியன் டெரோசியோ** நிறுவினார்.
- இவரது சீடர்கள் "**டெரோசியன்கள்**" என்று அழைக்கப்பட்டனர்.

**பண்டித ஈஸ்வர சந்திர வித்யா சாகர்:**

- ❖ சிறந்த கல்வியாளர், மனித நேயம் மிக்கவர், சமூக சீர்திருத்தவாதி.
- ❖ இந்திய சமுதாயத்தில் கல்வியைப் பரப்புவதன் மூலமாகவே சீர்திருத்தம் கொண்டு வர முடியும் என்று கருதினார்.
- ❖ "**பெதுான் பள்ளியை**" நிறுவ ஜெ.டீ. பெதுான் என்பவருக்கு உறுதுணையாக இருந்தார்.
- ❖ குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.
- ❖ 1856—ல் விதவைகள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ கல்விச் சேவையை பாராட்டி "**வித்யா சாகர்**" பட்டம் வழங்கப்பட்டது.

**ஜோதிபா கோவிந்தா பூலே:**




- ❖ மகாராஷ்டிராவில் தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த இவர் உயர்ஜாதி ஆதிக்கத்துக்கு எதிராக வாழ்நாள் முழுவதும் நீண்ட போராட்டத்தை மேற்கொண்டார்.
- ❖ 1873—ல் "**சத்ய சோதக் சமாஜம்**" என்ற அமைப்பை தோற்றுவித்தார்.
- ❖ பெண் கல்விக்காக இவரும் இவரது மனைவியும் இணைந்து பூனாவில் 1851—ல் முதலாவது பெண்கள் பள்ளியை நிறுவினர்.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



## இராமலிங்க அடிகள்(வள்ளலார்): (சமரச சுத்த சன்மார்க்க சங்கம்)

- 19—ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த சமயத் தலைவர்களில் தலை சிறந்தவர் இராமலிங்க அடிகளாவார்.
- 1823—ல் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள **சின்ன மருதூரில்** பிறந்தார்.
- 1865—ல் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவினார்.
- **திருவருட்பா, மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்யம்** போன்ற நூலை எழுதினார்.
- இவரது கோட்பாடு **ஜீவகாருண்யம்** (உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல்) ஆகும்.
- 1870—ல் **சத்திய ஞான சபையை** (வடலூருக்கு அருகில்) கூட்டி, இறைவனை **ஜோதி வடிவமாக** வழிபடலாம் என்றும், அருட்பெரும் ஜோதியாக இருக்கிறார் என்றும் கூறினார்.
- **சத்திய தரும சாலையை** (ஏழைகளின் பசியைப் போக்க) வடலூரில் நிறுவினார்.
- மனித இனத்திற்கு செய்யும் தொண்டே **மோட்சத்தை அடைவதற்கான வழி** என்றார்.

## ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள்:

- ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் 1809—ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள **சாமித்தோப்பு** என்ற ஊரில் பிறந்தார்.
- இவரது இயற்பெயர் **முடிசூடும் பெருமாள்** என்றாலும் **முத்துக்குட்டி** என்றே அனைவரும் அழைத்தனர்.
- இவரது போதனைகள் காலப்போக்கில் **"அய்யாவழி"** என்று பெயர் பெற்றது.
- இவர் இயற்றிய சமய நூல்களான அகிலத்திரட்டு, அம்மானை, அருள்நூல் மற்றும் அவரது போதனைகளை அடிப்படையாகக் கொண்டு **"அய்யாவழி சமயம்"** பரவியது.
- பல இடங்களில் **"நிழல் தங்கல்"** என்ற வழிபாட்டுத் தலங்கள் கட்டப்பட்டன.

## ஸ்ரீ நாராயண குரு

- கேரளாவில் தோன்றியவர்
- 1903—ல் ஸ்ரீநாராயண **குரு தர்ம பரிபாலன் யோகம்** என்ற இயக்கத்தைத் தொடங்கினார்.

## ஸ்ரீபாத சாது மகாராஜா

KARAKUDI VIDYA SRI SAMPLE MATERIALS
447 PASSED TILL DATE 8015513365 PG TRB / TET PAPER I & II / TNPSC / PSYCHOLOGY
www.vidyasriacdaemy.com

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- ❖ மூங்கிர் மாவட்டத்தில் பிறந்தார்.
- ❖ சைத்தன்யரை கவுரவிக்கும் வரையில் **"பிரேம மந்திர்"** என்னும் கோவிலைக் கட்டினார்.

**அம்பேத்கார்**

- ❖ தலித் மக்களின் கடவுளாகக் கருதப்படும் இவர் 1891ல் **மகவு** (Mhow) – பிறந்தார்.
- ❖ 1924—ல் **சாதியிலிருந்து விலக்கப்பட்டடோர் நலச் சங்கம்** (பாசிகிருத்திக்காரணி சபா) (Outcastes Welfare Association) என்பதை நிறுவினார்.
- ❖ 1927ல் மும்பையில் **மகத் மார்ச்** என்ற பேரணியை நடத்தினார் (மனுஸ்மிருத்தி குளத்தில் குடிநீர் எடுக்கும் உரிமைக்காக)

**தந்தை பெரியார்**

- ❖ தென்னிந்தியாவில் தோன்றிய மாபெரும் சீர்திருத்தவாதி.

**அரசப்பிரதிநிதிகள் (Viceroys)**

1. கானிங் — 1858 – 1862
2. எல்ஜின்—I — 1862 – 1863
3. லாரன்ஸ் — 1864 – 1869
4. மேயோ — 1869 – 1872
5. நார்த்புரூக் — 1872 – 1876
6. லிட்டன் — 1876 – 1880
7. ரிப்பன் — 1880 – 1884
8. டப்ரின் — 1884 – 1888
9. லேன்ஸ்டவுன் — 1888 – 1893
10. எல்ஜின்—II - 1894 – 1899
11. கர்சன் — 1899 – 1905
12. மிண்டோII — 1905 – 1910
13. ஹார்டிஞ்ச் — 1910 – 1916

SAMPLE PDF - 9442738785
www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 14. செம்ஸ்போர்டு | — | 1916 – 1921 |
| 15. ரீடிங் | — | 1921 – 1926 |
| 16. இர்வின் | — | 1926 – 1930 |
| 17. வெல்லிங்டன் | — | 1931 – 1936 |
| 18. லின்லித்கோ | — | 1936 – 1944 |
| 19. வேவல் | — | 1944 – 1947 |
| 20. மவுண்ட்பேட்டன் | — | 1947 – 1948 |
| 21. சி. இராஜகோபாலாச்சாரியார் | — | 1948 – 1950. |

**கானிங்பிரபு (1856 – 1862) :—**

- இவர் இந்தியாவின் முதல் **வைசிராய்** ஆவார். (கடைசி தலைமை ஆளுநரும் (Governor Genera) இவரே).
- 1857—ல் **சிப்பாய்க்கலகம்** (முதல் இந்திய சுதந்திரப்போர்) நடைபெற்றது.
- 1858—ல் **விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை (இந்தியாவின் மகாசாசனம்** - Magna Carta) வெளியிடப்பட்டது.
- 1857—ல் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டது.
- **அவகாசியிலிக் கொள்கை** (வாரிசு இழப்புக் கொள்கை) நீக்கப்பட்டது.
- 1861—ல் இந்தியக் கவுன்சில் சட்டம் கொண்டு வரப்பட்டது.

**எல்ஜின் பிரபு I (1862—63):**

- வடமேற்கு எல்லைப் புறத்தில் வாழ்ந்து வந்த **வகாபிகளுக்கு** (முஸ்லீம்களில் வெறியுணர்ச்சி கொண்ட ஒரு வகுப்பினர்) எதிராகப் படையொன்றை அனுப்பி வைத்தார்.

**லாரன்ஸ் பிரபு (1864—69):**

- இவர் ஆப்கானியர்களுடன் **"திறமையான செயலின்மை"** (Masterly inactivity) கொள்கையைக் கடைப்பிடித்தார்.

SAMPLE PDF - 9442738785
www.Padasalai.Net

❖ 1865—ல் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் உயர்நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.




❖

**மேயோ பிரபு (1869—72):**

❖ 1872—ல் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

❖ அந்தமான தீவில் கொலை செய்யப்பட்டார். (இந்திய மண்ணில் கொலை செய்யப்பட்ட ஒரே ஆங்கிலத் தலைமை ஆளுநர்).

**நார்த் புரூக் (1872—76):**

- இவரது காலத்தில் வேல்ஸ் இளவரசர் "ஏழாம் எட்வர்டு" இந்தியாவிற்கு வருகை தந்தார்.
- இவரும் ஆப்கானியர்களுடன் "திறமையான செயலின்மை" கொள்கையை (தலையிடாக் கொள்கை) கடைப்பிடித்தார்.

**லிட்டன் பிரபு (1876—1880):**

- 1878—ல் வட்டார மொழிப் பத்திரிக்கைச் சட்டத்தை (தாய் மொழிப் பத்திரிக்கைச் சட்டம் — Vernacular Press Act) கொண்டு வந்தார்.இச்சட்டம் **"வாய்ப்பூட்டுச் சட்டம்"** (Gagging Act) என்று அழைக்கப்படுகிறது.
- இந்திய ஆட்சிப்பணியின் (I C S) வயது 21—ல் இருந்து 19—ஆகக் குறைக்கப்பட்டது.
- 1877—ல் **"டெல்லி தர்பார்"** நடத்தி விக்டோரியா மகாராணியை **"இந்தியாவின் பேரரசி"** என பிரகடனப் படுத்தினார். இந்தியாவில் 1876 முதல் 1878 வரை கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. இந்நிலையில் ஆடம்பர செலவில் நடத்தப்பட்ட இந்தத் தர்பார் **"ரோம்நகர் எரிந்து கொண்டிருந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்தது போல் இருந்தது"** என்று வர்ணிக்கப்படுகிறது.
- 1878—ல் இந்திய ஆயுதச் சட்டத்தை (Arms Act) கொண்டு வந்தார். இச்சட்டத்தின்படி இந்தியர்கள் ஆயுதங்கள் வாங்கினாலும், விற்றாலும் அரசிடம் உரிமம் (Licence) பெற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதிலிருந்து ஆங்கிலேயர்களுக்கு விலக்கி அளிக்கப்பட்டது.
- இவர் இலக்கிய உலகின் **"ஓவன் மெரிடித்"** என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்.
- இவரது காலத்தில் இரண்டாம் ஆப்கானியப் போர் (1878—80) நடைபெற்றது. முடிவில் **"காண்டமக்"** உடன்படிக்கை கையெழுத்தானது.

**ரிப்பன் பிரபு 1880 — 1884 :—**

- 1881—ல் வட்டார மொழிப் பத்திரிக்கைச் சட்டத்தை நீக்கினார்.

- 1881—ல் முதல் தொழிற்சாலைகள் சட்டத்தை இயற்றினர். (12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் வேலை நேரத்தை நிர்ணயித்த சட்டம்)
- 1881—ல் முதல் முறையான மக்கள் தொகை கணக்கெடுப்பு (First Regular Cencus) அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1882—ல் W.W. ஹண்டர் தலைமையில் ஒரு கல்விக்குழுவை நியமித்தார். இக்குழு தொடக்கக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி இவற்றின் முன்னேற்றத்திற்கு ஆலோசனை வழங்கியது.
- பஞ்சாப் பல்கலைக் கழகம் ஏற்பட இவர் காரணமாக இருந்தார்.
- 1882—ல் உள்ளாட்சி முறையை (தல சுய ஆட்சி – Local Self Govt) அறிமுகப்படுத்தினார். எனவே இவர் **"உள்ளாட்சியின் தந்தை"** என்று அழைக்கப்படுகிறார். [சென்னையில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது]
- 1883—ல் இல்பர்ட் மசோதா கொண்டு வரப்பட்டது. அதன்படி ஆங்கிலக் குற்றவாளிகளை விசாரிக்கும் அதிகாரம் இந்திய நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டது.
- இந்தியர்களின் பிரச்சினைகளை கனிவுடனும், பரிவுடனும் கையாண்ட காரணத்தினால் இவரை **"ரிப்பன் தி குட்"** (ரிப்பன் எங்கள் அப்பன்) என்று மக்கள் போற்றினர்.

<u>டப்ரின் பிரபு (1884 – 1888)</u>

- 1885—ல் இந்திய தேசியக் காங்கிரஸ் (Indian Natiioanl Congress) மும்பையில் உள்ள கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியில் **"ஆலன் ஆக்டேவியன் ஹியூம்"** (A.O. Hume) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.
- எனவே A.O.ஹியும் இந்திய தேசிய காங்கிரசின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
- 1885— முதல் மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் "**உமேஷ் சந்திர பானர்ஜி**" (W.C. பானர்ஜி)
- 1886—2—ம் மாநாட்டின் (கல்கத்தா) தலைவர் தாதாபாய் நௌரோஜி.
- 1887—3—ம் மாநாட்டின் (சென்னை) தலைவர் "**பத்ருதீன் தயாப்ஜி**"
- இவரது காலத்தில் 3—வது பர்மியப் போர் (1885) நடைபெற்றது.

<u>**லேன்ஸ்டவுன் (1888—94):**</u>

- இந்திய – ஆப்கானிய எல்லையைத் தீர்மானிக்க டூரண்ட் கமிட்டி அமைக்கப்பட்டது. அதுவே **"டூரண்ட் கோடு"** அமைத்து எல்லையை தீர்மானித்தது.

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net

- ❖ 1891—ல் தொழிற்சாலை சட்டம் கொண்டுவரப்பட்டு தொழிற்சாலை விதிகள் வகுக்கப்பட்டன.

**எல்ஜின் — II (1894—99):**

- ❖ 1896—ல் மலபார் "**மாப்பிளாக்கள்**" செய்த கலகத்தை ஒடுக்கினார்.
- ❖ 1896—ல் வட இந்தியாவில் ஏற்பட்ட கடுமையான பஞ்சம் பல உயிர்களைப் பலி கொண்டது.

**கர்சன் பிரபு (1899—1905):**

- ❖ 1899—ல் கல்கத்தா மாநகராட்சி சட்டம் கொண்டுவரப் பட்டது. (இந்தியரின் அதிகாரம் குறைக்கப்பட்டது)
- ❖ 1904—ல் இந்திய பல்கலைக்கழகச் சட்டம் கொண்டுவரப்பட்டது. (உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது)
- ❖ 1904 – தொல்பொருள் பாதுகாப்புச் சட்டம் (பழங்கால நினைவுச் சின்னங்களை பாதுகாக்க) கொண்டு வரப்பட்டது.
- ❖ 1905 அக்.16—ல் வங்கப் பிரிவினை ஏற்பட்டது. (இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களிடையே மோதலை ஏற்படுத்த நினைத்த இச்சூழ்ச்சி "**பிரித்தாளும் கொள்கை**" (Divide and Rule Policy) எனப்படுகிறது.
- ❖ வங்காளத்திலுள்ள "**பூஸா**" வில் "**விவசாய ஆராய்ச்சி நிலையம்**" ஒன்றை ஆரம்பித்தார்.
- ❖ கடுமையான பஞ்சத்தை தவிர்க்க "**பஞ்ச நிவாரணக் குழு**" வை ஏற்படுத்தினார்.
- ❖ 1902—ல் "**சர் ஆண்ட்ரூ பிரேசர்**" தலைமையில் காவல்துறைக் குழு ஒன்றை நியமித்தார்.
- ❖ இவர் **பிரிட்டிஷ் இந்தியாவின் அவுரங்கசீப்** என்றழைக்கப்படுகிறார்.
- ❖ 1899—ல் இந்திய நாணய, ரூபாய் மாற்றுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. (பிரிட்டிஷ் பொற்காசினை இந்தியாவில் சட்டமுறை நாணயமாக்குவது).

**மின்டோ – II (1905—10):**

- ❖ 1905—ல் சுதேசி இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- ❖ 1906—ல் முஸ்லீம் லீக் கட்சி, நவாப் சலிமுல்லா என்பவரால் டாக்காவில் தோற்றுவிக்கப்பட்டது.

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net

- 1907—ல் சூரத் பிளவு ஏற்பட்டது (தீவிரவாதிகளும் மிதவாதிகளும் தனித்தனியே பிரிதல்)
- 1909—ல் மின்டோ—மார்லி சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது. (முஸ்லீம்களுக்கு தனித்தொகுதி வழங்கப்பட்டது).




**ஹார்டிஞ்ச் — II (1910—1916):**

- 1911—ல் வங்கப் பிரிவினை ரத்து செய்யப்பட்டது.
- 1911—ல் தலைநகர், கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றப்பட்டது.
- 1911, டிசம்பர் 12ல் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்.

- 1914—ல் முதல் உலகப்போர் துவங்கியது.
- 1915—ல் காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு திரும்பினார்.
- 1915—ல் "**சபர்மதி ஆசிரமத்தை**" "**அகமதாபாத்தில்**" நிறுவினார்.
- 1916—ல் அன்னிபெசண்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தை (Home Rule Movement) சென்னை அடையாற்றில் துவக்கினார். (திலகர் பூனாவில் துவக்கினார்).
- 1916—ல் "**லக்னோ"** மாநாட்டில் தீவிரவாதிகளும் மிதவாதிகளும் அன்னிபெசண்ட்டின் முயற்சியால் ஒன்றிணைந்தனர். (முஸ்லீம் லீக்கும் காங்கிரசும் கூடிய மாநாடு – ஜவஹர்லால் நேரு முதன்முதலில் காந்தியை சந்தித்த மாநாடு).
- 1916—ல் முதல் பெண்கள் பல்கலைக் கழகம் பூனாவில் தோற்றுவிக்கப்பட்டது.

## செம்ஸ்போர்டு (1916—21):

- 1917—ல் காந்தி, சாம்பரான் (பீகார்) சத்தியாகிரகத்தை ஆரம்பித்தார். (முதல் சத்தியாக்கிரகம்)
- 1917—ல் வாரனாசி இந்துப் பள்ளியை அன்னிபெசண்ட் ஆரம்பித்தார். (1925—ல் அது இந்துக் கல்லூரியாக மதன்மோகன் மாளவியாவால் மாற்றப்பட்டது)
- 1918—ல் கேடா சத்தியாக்கிரகம் (குஜராத்) மற்றும் அகமதாபாத் மில் தொழிலாளர் போராட்டம் நடைபெற்றது.
- மூன்றாவது ஆப்கானியப் போர் (1919) நடைபெற்றது.
- 1919—ல் மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது.
- 1919—ல் ரௌலட் சட்டம் (உத்தரவின்றி எவரையும் கைது செய்யும் அதிகாரம்) கொண்டு வரப்பட்டது.
- 1919, ஏப்ரல் 13—ல் ஜாலியன் வாலாபாக் படுகொலை நடைபெற்றது.
- 1920—ல் ஒத்துழையாமை இயக்கத்தை காந்தி ஆரம்பித்தார்.
- 1920—ல் அலி சகோதரர்களால் (முகமது அலி, சவுகத் அலி) கிலாபத் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

SAMPLE PDF-9442738785 www.Padasalai.Net

## ரீடிங் பிரபு (1921 – 1926):

- 1921—ல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வந்தார். (1922—ல் சென்னைக்கு வந்தார்).
- 1921—ல் மலபாரில் ஏற்பட்ட மாப்ளாக் கலகத்தை அடக்கினார்.
- 1921—ல் கம்யூனிஸ்ட் கட்சியை **M.N. Roy** நிறுவினார்.
- 1921—ல் **விஸ்வபாரதி** பல்கலைக்கழகம் தாகூரால் துவங்கப்பட்டது.
- 1922, பிப் 5—ல் சௌரி சௌரா நிகழ்ச்சி நடைபெற்றது.
- 1922 பிப் 12—ல் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார்.
- 1923—ல் C.R. தாஸ், மோதிலால் நேரு இவர்களால் **"சுயராஜ்யக் கட்சி"** அலிப்பூர் சிறையில் தோற்றுவிக்கப்பட்டது.
- 1924—ல் காந்தி, இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக **"பெல்காம்"** மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ஒருமுறை மட்டுமே தலைவர்)
- 1925— சரோஜினி நாயுடு, காங்கிரசின் தலைவராக **"கான்பூர்"** மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். (முதல் இந்தியப் பெண்)
- 1925—ல் "ராஷ்டிரிய சுயம் சேவக்" என்ற அமைப்பை ஹெட்கேவர் என்பவர் துவக்கினார். (ஆர். எஸ். எஸ்.)

## இர்வின் பிரபு (1926—31):

- 1928—ல் சைமன்குழு இந்தியா வந்தது
- 1929—ல் சென்னைக்கு வந்தது.
- 1928—ல் பட்டேல் தலைமையில் "**பர்தோலி சத்தியாகிரகம்**" ஆரம்பிக்கப்பட்டது.
- 1928— நேரு அறிக்கை வெளியிடப்பட்டது.
- 1929, டிச.29—ல் நேரு தலைமையில் காங்கிரஸ் மாநாடு கூடியது. அதில் "**பூர்ண சுயராஜ்யம்**" அறிவிக்கப்பட்டது.
- 1930, ஜன.26—ல் **"சுதந்திர தினம்"** அனுசரிக்கப்பட்டது.
- 1930—ல் சட்டமறுப்பு இயக்கம் தொடங்கப்பட்டது.
- 1930, மார்ச் 12—ல் **"தண்டி யாத்திரை"** காந்தியடிகளால் தொடங்கப்பட்டது. (சபர்மதி ஆசிரமத்திலிருந்து)

SAMPLE PDF-9442738785 www.Padasalai.Net

KARAKUDI VIDYA SRI SAMPLE MATERIALS
447 PASSED TILL DATE 8015513365 PG TRB / TET PAPER I & II / TNPSC / PSYCHOLOGY
www.vidyasriacdaemy.com

- 1930—ல் முதல் வட்ட மேஜை மாநாடு நடைபெற்றது. (காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை)
- 1931—ல் **காந்தி — இர்வின் ஒப்பந்தம்** (டில்லி ஒப்பந்தம்) கையெழுத்தானது.
  (மார்ச் 8)

**வெலிங்டன்பிரபு (1931—36):**

- 1931—ல் இரண்டாம் வட்டமேஜை மாநாடு நடைபெற்றது. அதில் காந்தி கலந்து கொண்டார்.
- 1932—ல் மூன்றாம் வட்டமேஜை மாநாடு நடைபெற்றது.
- 1932—ல் ராம்சே மெக்டோனால்டு தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீட்டை அறிவித்தார்.
- 1932—ல் காந்தி—அம்பேத்கார் இவர்களுக்கிடையே **"பூனா ஒப்பந்தம்"** ஏற்பட்டது.
- 1935—ல் **"இந்திய அரசுச் சட்டம்**" கொண்டு வரப்பட்டது.

**லின்லித்கோ பிரபு (1936—43):**

- 1939—ல் இரண்டாம் உலகப்போர் துவங்கியது.
- 1940—ல் நடைபெற்ற **"லாகூர் மாநாட்டில்"** ஜின்னா தனிநாடு கோரிக்கை வைத்தார்.
- 1940, **"ஆகஸ்ட் சலுகையை"** (August offer) அறிவித்தார்.
- 1940—ல் தனிநபர் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது. (முதல் மனிதர் ஆசார்யா வினோபா பாவே).
- 1942—ல் கிரிப்ஸ் தூதுக்குழு வருகை தந்தது. இதனை "**திவாலாகிக் கொண்டிருக்கும் வங்கியில் பின் தேதியிட்ட காசோலை**" என்று காந்தி கூறினார்.
- 1942, ஆகஸ்ட் 8—ல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் (ஆகஸ்ட் புரட்சி) ஆரம்பிக்கப்பட்டது.
- 1939—ல் நேதாஜி "**பார்வர்டு பிளாக் கட்சியை**" தொடங்கினார்.

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net

- 1943—ல் இந்திய தேசிய ராணுவத்தை (Indian National Army) சிங்கப்பூரில் நேதாஜி தொடங்கினார்.

## வேவல் பிரபு (1943—47):

- 1944—ல் ராஜாஜி திட்டம் கொண்டுவரப்பட்டது.
- 1944—ல் சிம்லா மாநாட்டைக் கூட்டினார்.
- 1946—ல் அமைச்சரவைத் தூதுக்குழு (கேபினட் மிஷன்) அரசியலமைப்பை உருவாக்க இந்தியா வந்தது.
- 1946— செப்.2—ல் நேரு தலைமையில் **"இடைக்கால அரசாங்கம்"** அமைக்கப்பட்டது.
- 1946, ஆகஸ்ட் 16—ஐ "**நேரடி நடவடிக்கை நாள்**" என ஜின்னா அறிவித்தார்.

## மௌண்ட் பேட்டன் பிரபு (1947—48):

- 1947, ஜூன் 3—ல் இந்தியப் பிரிவினைக்கான தனது திட்டத்தினை (மௌண்ட் பேட்டன் திட்டம்) அறிவித்தார்.
- 1947, ஜூலை 18—ல் பிரிட்டிஷ் அரசாங்கம் **"இந்திய விடுதலைச் சட்டத்தை**" நிறைவேற்றியது.
- 1947, ஆகஸ்ட் 15—ல் **இந்தியா சுதந்திரம்** அடைந்தது.
- 1947, ஆகஸ்ட் 14—ல் **பாகிஸ்தான் சுதந்திர** நாடானது.
- சுதந்திரத்தின் போது இங்கிலாந்து பிரதமர் **"அட்லி"** (தொழிலாளர் கட்சி) பதவி வகித்தார்.
- சுதந்திரத்தின் போது காங்கிரசின் தலைவராக இருந்தவர் **"சுஜேதா கிருபாளினி**" ஆவார். (முதல் பெண் முதலமைச்சர் — உ.பி)
- சுதந்திர இந்தியாவின் "**முதல் தலைமை ஆளுநர்**" மௌண்ட் பேட்டன் ஆவார்.

## ராஜகோபாலாச்சாரி (ராஜாஜி) (1948—50):

SAMPLE PDF - 9442738785
www.Padasalai.Net

- இவர் மௌண்ட் பேட்டனுக்குப் பிறகு தலைமை ஆளுநராக பதவி ஏற்றார்.
- 1950, ஜனவரி 26, இந்தியா குடியரசாகும் வரை பதவியில் இருந்தார்.
- சுதந்திர இந்தியாவின் “**முதல் இந்தியத் தலைமை ஆளுநர்**” ராஜாஜி ஆவார்.

## இந்திய தேசிய இயக்கம் (1885—1947)

## (Indian National Movement)

### தோற்றத்திற்கான காரணங்கள்:

- அரசியல் ஒற்றுமை (முதன்முறையாக ஒரு குடையின் கீழ் (பிரிட்டிஷ் அரசு) கொண்டுவரப்பட்டது)
- தகவல் தொடர்பு போக்குவரத்து வளர்ச்சி
- ஆங்கில மொழியும், மேலை நாட்டுக் கல்வியும்
- பத்திரிக்கைகளின் பங்களிப்பு
- 19—ஆம் நூற்றாண்டு சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்.
- ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டல்.
- இனப் பாகுபாடு (ஆங்கிலேயரின் உயர்வு மனப்பான்மை)
- லிட்டனது நிர்வாகம் (டெல்லி தர்பார்)
- இல்பர்ட் மசோதா சச்சரவு.

இத்தகைய காரணங்களால் இந்தியாவில் தேசிய இயக்கம் தோன்றியது.

### ஆரம்பகால அரசியல் கழகங்கள்:

1. பிரிட்டிஷ் இந்தியக் கழகம் — 1851— வங்காளம்
2. பம்பாய் கழகம் — 1852, தாதாபாய் நௌரோஜி
3. கிழக்கு இந்தியக் கழகம் — 1856, லண்டன்
4. சென்னை சுதேசி சங்கம் — 1852

SAMPLE PDF 9442738785 www.Padasalai.Net

5. பூனா சர்வஜனச் சபை – 1870

6. சென்னை மகாஜன சங்கம் — 1884

## இந்திய தேசிய காங்கிரஸ் (1885):

- இந்திய தேசியக் காங்கிரஸ் (Indian National Congress) **"ஆலன் ஆக்டேவியன் ஹியூம்"** (ஓய்வு பெற்ற ஆங்கில அதிகாரி) என்பவரால் 1885—ல் மும்பையிலுள்ள கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியில் டப்ரின் பிரபு காலத்தில் தொடங்கப்பட்டது.
- A.O. ஹியூம் INC—யின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
- முதல் கூட்டம் **"மும்பையில்"** நடைபெற்றது.
- முதல் தலைவர் **"உமேஷ் சந்திர பானர்ஜி"** (W.C. பானர்ஜி)
- இதில் 72 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- 1886—ல் இரண்டாவது மாநாடு கல்கத்தாவில் **"தாதாபாய் நெளரோஜி"** (முதுபெரும் மனிதர்) தலைமையிலும், 1887—ல் 3—ம் மாநாடு சென்னையில் **"பத்ருதீன**




**தயாப்ஜி"** தலைமையிலும் நடைபெற்றது.




❖

**<u>INC—யின் ஆரம்பகால நோக்கங்கள்:</u>**

1. சட்டமன்ற விரிவாக்கம், பிரதிநிதித்துவம் பெறுதல்
2. கல்வியைப் பரப்புதல்
3. பத்திரிக்கைச் சுதந்திரம்
4. ICS தேர்வை இந்தியாவிலேயே நடத்தக் கோருதல்.

இந்திய தேசிய இயக்கத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

1. மிதவாதிகள் காலம் (1885—1905)
2. தீவிரவாதிகள் காலம் (1906—1916)
3. காந்தியடிகள் காலம் (1917—1947)

## மிதவாதிகள் காலம் (1885—1905):

## மிதவாத தலைவர்கள்:

- W.C. பானர்ஜி
- சுரேந்திரநாத் பானர்ஜி
- தாதாபாய் நௌரோஜி
- பெரோஸ் ஷா மேத்தா
- கோபால கிருஷ்ண கோகலே
- மதன் மோகன் மாளவியா
- பத்ருதின் தயாப்ஜி
- நீதிபதி ரானடே
- ஜி. சுப்ரமணிய அய்யர்

❖ இவர்களில் மிதவாதிகளின் தலைவர் **"கோபால கிருஷ்ண கோகலே"** குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

❖ சுரேந்திரநாத் பானர்ஜி இந்தியாவின் **"பர்க்"** என்று அழைக்கப்பட்டார். 1876—ல் இந்தியக் கழகம் ஒன்றை தோற்றுவித்தார். அவர் நிறுவிய இந்திய தேசியப் பேரவை (1883) பின்னர் 1886—ல் இந்திய தேசியக் காங்கிரசுடன் இணைக்கப்பட்டது.

❖ ஜி. சுப்ரமணிய அய்யர் **"சென்னை மகாஜன சபை"** மூலம் தேசியத்தை பரப்பினார். **"தி இந்து", "சுதேசமித்திரன்"** போன்ற பத்திரிக்கைகளையும் நிறுவினார்.

❖ தாதாபாய் நௌரோஜி **"இந்தியாவின் முதுபெரும் மனிதர்"** என்று அழைக்கப்படுகிறார். இந்தியாவிற்கான அதிகாரப் பூர்வமற்ற தூதராக இங்கிலாந்தில் இவர் கருதப்பட்டார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பொதுமக்கள் அவையில் உறுப்பினரான **"முதல் இந்தியர்"** இவரே ஆவார்.

SAMPLE PDF - 9442738785
www.Padasalai.Net

- கோபால கிருஷ்ண கோகலே காந்தியின் **அரசியல்குருவாகக்** கருதப்பட்டார். 1905—ல் **"இந்தியப் பணியாளர் கழகத்தை"** தோற்றுவித்தார்.

## மிதவாதிகளின் வழிமுறைகள்:

- கோரிக்கை மனுக்களை அளித்தல், தீர்மானங்கள் போடுதல், கூட்டங்கள் நடத்துதல், துண்டு பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றினர்.
- அரசின் கொள்கைகளைக் குறை கூறுவதிலும் சீர்திருத்தங்களைக் கோருவதிலுமே காங்கிரஸ் அக்கரை கொண்டிருந்ததால் இதனை **"அரசியல் போல் உள்ளது"** என காங்கிரசிலிருந்த இளைஞர்கள் வர்ணித்தனர்.

## சாதனைகள்:

1. 1892—ஆம் ஆண்டு இந்தியக் கவுன்சில்கள் சட்டத்தின் வாயிலாக சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தியது முக்கிய சாதனையாகும்.
2. மக்களிடையே பரந்த தேசிய விழிப்புணர்வை மிதவாதிகளால் உருவாக்க முடிந்தது.
3. ஆங்கிலேயர் எவ்வாறு இந்தியர்களைச் சுரண்டுகிறார்கள் என்பதை மக்களுக்கு புரிய வைத்தனர். தாதாபாய் நௌரோஜி எழுதிய **"இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்"** என்ற நூலில் **"செல்வச்சுரண்டல்"** கோட்பாட்டை விளக்கியிருந்தார். இதைப்பற்றி விசாரிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் **"வெல்பி"** குழுவை நியமித்தது. அதில் முதல் இந்திய உறுப்பினராக தாதாபாய் நியமிக்கப்பட்டார்.
4. **ரானடே, கோகலே** போன்ற ஒருசில மிதவாதிகள் சமூக சீர்திருத்தங்களிலும் கவனம் செலுத்தினர்.

## தீவிரவாதிகள் காலம் (1905—1916):

காங்கிரசின் ஒரு பிரிவினர் மிதவாதிகளின் அணுகுமுறைகளில் நம்பிக்கை இழந்தனர். துணிச்சலான வழிமுறைகளைக் கையாண்டு



SAMPLE PDF - 9442738785t
www.Padasalai.Net

வெற்றிபெற முடியும் என்று தீவிரவாதிகள் நம்பினர். அவர்களில் முக்கியமானவர்கள்.

1. பாலகங்காதர திலகர் (பால் — Bal))
2. லாலா லஜபதிராய் (லால் — Lal)
3. பிபின் சந்திரபால் (பால் - Pal)
4. அரவிந்த கோஷ்

❖ இவர்களில் முதல் மூவரை **"Bal-Lal-Pal"** என்று அழைப்பர்.

## தீவிரவாதம் தோன்ற காரணங்கள்:

1. 1892— ஆம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டத்தை தவிர குறிப்பிடத்தக்க வெற்றி எதனையும் மிதவாதிகள் பெறவில்லை
2. 1896—97—ல் தோன்றிய பஞ்சத்தினாலும், பிளேக் நோயினாலும் நாடு முழுவதும் மக்கள் கடும் துன்பத்திற்கு ஆளாயினர்.
3. நிறவெறி காரணமாக தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் மோசமாக நடத்தப்பட்டனர்.
4. 1904—05—ல் நடைபெற்ற ரஷ்ய—ஜப்பானியப் போரில் ஜப்பான் வென்றது இந்தியர்களுக்கு தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் வளர்த்தது.
5. கர்சன் பிரபுவின் பிற்போக்கான ஆட்சிமுறை உடனடிக் காரணமாக அமைந்தது. (கல்கத்தா மாநகராட்சி சட்டம் (1899), பல்கலைக்கழகச் சட்டம் (1904), வங்கப்பிரிவினை (1905) போன்றவைகள் இவர்களை மிகவும் பாதித்தது).
6. தீவிரவாதம் தோன்றுவதற்கு வங்கப் பிரிவினை ஒரு தீப்பொறியாக அமைந்தது.

## தீவிரவாதிகள் பின்பற்றிய வழிமுறைகள்:

❖ தீவிரவாதிகளின் தலையாய குறிக்கோள் **"சுயராஜ்யம்"** அல்லது **"முழு விடுதலையே"** தவிர வெறும் தன்னாட்சி அல்ல.

❖ அரசு நீதிமன்றங்களையும், பள்ளிகளையும், கல்லூரிகளையும் புறக்கணிப்பதன் மூலம் ஆங்கிலேயருக்கு ஒத்துழைப்பு கொடுக்க மறுப்பது.

SAMPLE PDF-9442738785 www.Padasalai.Net

- சுதேசிப் பொருட்களை ஆதரிப்பது அந்நியப் பொருட்களை வாங்க மறுப்பது.
- தேசியக் கல்வியை அறிமுகப்படுத்தி வளர்ப்பது.

## தலைவர்கள்:

### பாலகங்காதர திலகர்:

- **லோக மான்ய திலகர்** என்றழைக்கப்படும் இவர் தீவிரவாதிகளின் "**தலைவர்**" ஆவார்.
- **"மராத்தா"** மற்றும் **"கேசரி"** என்ற செய்தித்தாள்கள் மூலம் ஆங்கிலேயரைச் சாடினார்.
- 1916—ல் பூனாவில் **"தன்னாட்சி கழகத்தை"** அமைத்தார்.
- **"சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை நான் அடைந்தே தீருவேன்"** என்று முழங்கினார்.
- தமிழ்நாட்டில் சுப்பிரமணிய பாரதியார், சுப்பிரமணிய சிவா, வ.உ. சிதம்பரனார் ஆகியோர் திலகரின் நெருங்கிய நண்பர்களாவர்.

### லாலா லஜபதிராய்:

- இவர் **"பஞ்சாப் சிங்கம்"** என்றழைக்கப்படுகிறார்.
- சைமன் குழுவிற்கு எதிரான போராட்டத்தில் தடியடிபட்டு உயிர் துறந்தார்.

### பிபின் சந்திரபால்:

- இவர் ஒரு மிதவாதியாக தனது வாழ்க்கையைத் தொடங்கி தீவிரவாதியாக மாறியவர்.
- நியூ இந்தியா என்ற பத்திரிக்கையின் உதவியுடன் தனது கருத்துக்களை வெளியிட்டார்.
- அனல் பறக்கும் பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் தேசியத்தை மூலை முடுக்கெல்லாம் பரப்பினார்.

SAMPLE PDF- 9442738785 www.Padasalai.Net

## அரவிந்த கோஷ்:

- இவர் சுதேசி இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு சிறைப்படுத்தப்பட்டார்.
- விடுதலையான பிறகு பிரெஞ்சுப் பகுதியான பாண்டிச்சேரியில் தங்கி ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

## வங்கப்பிரிவினை (1905, அக்.16):

- **கர்சன் பிரபு** வங்காளத்தை 1905, அக்.16—ல் இரண்டாகப் பிரித்தார்.
- இது வங்காளத்திலுள்ள இந்துக்களையும், முஸ்லீம்களையும் பிரிப்பதற்கான சூழ்ச்சியாகும்.
- இது பிரித்தாளும் கொள்கை (Divide and Rule Policy) என்றழைக்கப்படுகிறது.
- இப்பிரிவினை மக்களை பிரிப்பதற்கு பதிலாக ஒற்றுமை ஏற்படுவதற்கும் சுதேசி இயக்கம் தோன்றுவதற்கும் வழிவகுத்தது.
- வங்கப்பிரிவினை, மிதவாதியான தாதாபாய் நௌரோஜியையே 1906—ல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் சுயராஜ்யம் குறித்து பேச வைத்தது.

## சுதேசி இயக்கம் (1906):

- சுதேசி என்பதன் பொருள் **"சொந்த நாடு"** என்பதாகும்.
- இதன்படி ஏராளமான மக்கள் ஆங்கிலேயப் பொருட்களையும், துணி வகைகளையும் புறக்கணித்தனர். இதனால் இந்தியத் தொழில்கள் வளர்ந்தன.
- தென்னிந்தியாவில் தூத்துக்குடியைச் சேர்ந்த வ.உ.சி. **"சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியை"** (Swedeshi Steam Navigation Company) இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் வணிகம் செய்ய நிறுவினார்.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com






## முஸ்லீம் லீக் தோற்றம் (1906):

- I N C –யின் தோற்றத்தால் அச்சமடைந்த முஸ்லீம்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு தனியான ஒரு அமைப்பு தேவை என்று கருதினர்.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- 1906 டிச.30—ல் டாக்காவில் **"நவாப் சலிமுல்லா கான்"** தலைமையில் முஸ்லீம் லீக் உருவானது.
- I N C – ஐப் போலவே ஆண்டுதோறும் மாநாடு நடத்தி தங்களது கோரிக்கைகளை ஆங்கிலேயருக்கு அனுப்பினர்.
- மின்டோ மார்லி சீர்திருத்தத்தில் (1909) முஸ்லீம்களுக்கென தனித்தொகுதியை பெற்றது இவர்களது முதல் சாதனையாகும்.

**சூரத் பிளவு (1907):**

- காங்கிரஸ், சுயராஜ்யம் அடைவதே தனது நோக்கமாக அறிவிக்க வேண்டும் என்று தீவிரவாதிகள் விரும்பினர். ஆனால் அத்தகைய தீவிர வழிகளில் ஈடுபட்டு நேரடியாக ஆங்கிலேயருடன் மோதுவதற்கு மிதவாதிகள் தயாராக இல்லை.
- எனவே 1907—ல் சூரத் மாநாட்டில் கட்சி இரண்டாக உடைந்தது. இதுவே **"சூரத் பிளவு"** எனப்படுகிறது.
- திலகர் தலைமையில் தீவிரவாதிகள் மாநாட்டை விட்டு வெளியேறினர்.

**மிண்டோ—மார்லி சீர்திருத்தங்கள் (1909):**

- அரசப் பிரதிநிதி மின்டோவும், இந்திய அரசுச் செயலர் மார்லியும் இணைந்து இந்திய சட்டமன்றங்களைச் சீர்திருத்த சட்டம் வகுத்தனர்.
- இதன்படி **"முஸ்லீம்களுக்கென தனித்தொகுதிகள்"** அறிமுகப்படுத்தப்பட்டன.
- இதனை காங்கிரஸ் கடுமையாக எதிர்த்தது.
- **பால்—லால்—பால்** கொண்ட மூவரணி மக்களிடையே போராட்ட உணர்வைத் தூண்டியது. மாசினியின் "வாளை எடுத்து அரசை வீழ்த்து. ஏனெனில் அது அத்துமீறிய அன்னிய அரசு" என்ற சொற்கள் இந்தியரின் மனதில் எதிரொலித்தது.

**முதல் உலகப்போர் (1914—18):**

- 1914—ல் முதல் உலகப்போர் தொடங்கியது.

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net

- இதில் இந்தியாவை ஈடுபடுத்த ஆங்கில அரசு விரும்பியது. ஆரம்பத்தில் காங்கிரஸ் தலைவர்களுக்கு விருப்பமில்லை. எனினும் இந்திய வீரர்கள் போரில் பங்கு பெறுவதைத் தடுக்கவில்லை.

## லக்னோ ஒப்பந்தம் (1916):

- 1916—ல் நடை லக்னோ காங்கிரஸ் மாநாட்டில் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
  1) பிரிந்த காங்கிரஸ் மீண்டும் ஒன்றிணைந்தது. 2) காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஆங்கிலேயருக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவது என ஒப்புக்கொள்ளப்பட்டது.
- இந்த லக்னோ ஒப்பந்தம் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு சாதகமாக எடுக்கப்பட்ட முக்கிய முடிவாகும்.
- லக்னோ மாநாட்டில்தான் ஜவஹர்லால் நேரு காந்தியை முதன்முதலில் சந்தித்தார்.

## தன்னாட்சி இயக்கம் (1916):

## Home Rule Movement:

- 1916—ல் இரண்டு தன்னாட்சிக் கழகங்கள் ஏற்படுத்தப் பட்டன.
- பூனாவில் திலகர் தன்னாட்சிக் கழகத்தை ஏற்படுத்தினார்.
- சென்னையில் **"அன்னிபெசண்ட்"** தன்னாட்சிக் கழகத்தை நிறுவினார்.
- இவ்விரு கழகங்களும் சேர்ந்து தன்னாட்சி அல்லது சுயாட்சி பெறுவதற்கு பிரச்சாரம் செய்தன. (பிரிட்டிஷ் பேரரசுக்குள்ளேயே தன்னாட்சி பெறுவதாகும்)
- இவ்வியக்கத்தை **மோதிலால் நேருவும், சி.ஆர். தாசும்** ஆதரித்தனர்.
- ஆங்கிலேய அரசு அன்னிபெசண்ட் நடத்திய **"நியூ இந்தியா"** பத்திரிக்கையை தடை செய்தனர். அன்னிபெசண்டும் திலகரும் கைது செய்யப்பட்டனர்.

## ஆகஸ்ட் அறிக்கை: (1917)

- இந்நிலையில் 1917—ல் மாண்டேகு பிரபுவின் ஆகஸ்ட் அறிக்கை (படிப்படியாக சுயாட்சி வழங்கப்படும்) வெளியிடப்பட்டதால் தன்னாட்சியக்கம் முடிவுக்கு வந்தது.

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net



## முதல் உலகப்போர் முடிவடைதல் (1918):

- 1918—ல் முதல் உலகப்போர் முடிவடைந்தது. ஆங்கிலேயர் சார்பில் போரிட்ட இந்தியர்கள் தங்களுக்கு சில சலுகைகள் கிடைக்குமென எதிர்பார்த்தனர்.
- அதனடிப்படையில் மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது.

## மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தம் (1919):

- 1919—ல் இயற்றப்பட்ட இச்சட்டத்தின்படி கிறித்துவர்கள், சீக்கியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் ஆகிய மூவருக்கும் தனித்தொகுதிகள் வழங்கப்பட்டன.
- இச்சட்டம் மாகானங்களில் இரட்டை ஆட்சி (Dyarchy) முறையை புகுத்தியது.
- இச்சட்டம் ஆங்கிலேயரின் பெருந்தன்மையற்ற செயல் எனவும் அதனை ஏற்றுக் கொள்வது இந்தியருக்கு மதிப்புடையதாகாது எனவும் அன்னிபெசண்ட் விவரித்தார். காங்கிரசும் இதனை நிராகரித்தது.

## புரட்சிகர இயக்கங்கள்:

- 19—ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தீவிரவாத, மிதவாத கொள்கைகள் இரண்டிலுமே உடன்பாடு இல்லாத பல ரகசிய அமைப்புக்கள் தோன்றின.
- வங்காளத்தில் **"அனுசிலான் சமிதி"** **"ஜுகந்தர்"** ஆகிய ரகசிய இயக்கங்கள் நிறுவப்பட்டன.
- மகாராஷ்டிரத்தில் சவார்க்கர் சகோதரர்களால் **"அபினவ பாரத் சங்கம்"** தோற்றுவிக்கப்பட்டது.
- சென்னையில் நீலகண்ட பிரம்மச்சாரி என்பவரால் **"பாரத மாதா"** சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- பஞ்சாபில் அஜித்சிங் ஒரு ரகசிய அமைப்பை ஏற்படுத்தினார்.
- இலண்டனிலிருந்த இந்தியா ஹவுசில், ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா என்பவர் இந்திய தேசியவாதிகளான மதன்லால் திஸ்ரா, சவார்க்கர்,

வி.வி.எஸ். அய்யர், டி.எஸ்.எஸ். ராஜன் போன்றோரை ஒன்று திரட்டினார்.

❖ அமெரிக்காவில் “**லாலா ஹர்தயாள்**” என்பவர் “**காதர்**” கட்சியைத் தோற்றுவித்து இந்தியாவிற்கு வெளியே புரட்சியாளர்களின் செயல்பாடுகளை ஊக்குவித்தார்.

## காந்தியடிகள் காலம் (1917—47):

இந்திய தேசிய இயக்கத்தின் மூன்றாம் நிலை காந்தி காலம் எனப்படுகிறது (1917—47). இக்கால கட்டத்தில் காந்தி தன்னிகரற்ற தலைவராக விளங்கினார். இவரது கொள்கைகளான “**அகிம்சை**” மற்றும் “**சத்தியாக்கிரகம்**” ஆங்கில அரசுக்கு எதிராக செயல்படுத்தப்பட்டன. காந்தி தேசிய இயக்கத்தை “**மக்கள் இயக்கமாக**” மாற்றினார்.

## காந்தியின் ஆரம்பகால வாழ்க்கை:

❖ 1869, அக்டோபர் 2—ல் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி குஜராத்திலுள்ள போர்பந்தர் என்னுமிடத்தில் பிறந்தார்.

❖ இங்கிலாந்து சென்று சட்டம் பயின்ற காந்தி 1891—ல் இந்தியா திரும்பினார்.

❖ 1893—ல் தென்னாப்பிரிக்கா சென்ற இவர் அங்கு நிலவிய “**இன ஒதுக்கல் கொள்கைக்கு**” எதிரான போராட்டத்தில் 20 ஆண்டுகள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

❖ 1915—ல் இந்தியா திரும்பினார். பின்னர் தேசிய இயக்கத்தில் முழுமையாக பங்கேற்று வழிநடத்திச் சென்றார்.

## சம்பரான் சத்தியாக்கிரகம் (1917):

❖ காந்தி தனது சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையை பரிசோதித்த முதல் சத்தியாக்கிரகம் இதுவாகும்.

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net

KARAKUDI VIDYA SRI SAMPLE MATERIALS
447 PASSED TILL DATE 8015513365 PG TRB / TET PAPER I & II / TNPSC / PSYCHOLOGY
www.vidyasriacdaemy.com

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- 1917—ல் பீகாரிலுள்ள **"சம்பரான்"** என்ற இடத்தில் ஐரோப்பிய அவுரிச்செடி பண்ணையாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டார்.




- 

**<u>கேடா சத்தியாக்கிரகம் (1918):</u>**

- காந்தி கலந்து கொண்ட இரண்டாவது சத்தியாக்கிரகம் இதுவாகும்.
- குஜராத்திலுள்ள **“கேடா”** மாவட்டத்தில் விளைச்சலால் பாதிக்கப்பட்ட குடியானவர்களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்பதற்காக இதில் கலந்து கொண்டார்.
- இப்போராட்டத்தில்தான் **“வல்லபாய் படேல்”** காந்தியின் நம்பிக்கைக்குரிய ஒரு சீடராக எழுச்சி பெற்றார்.

## அகமதாபாத் போராட்டம் (1918):

- 1918—ல் அகமதாபாத் ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஆதரித்து காந்தி சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.
- இறுதியாக ஆலை அதிபர்கள் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொண்டனர்.

  [சம்பரான், கேடா, அகமதாபாத் போன்ற சிறிய அளவிலான போராட்டங்கள்தான் காந்தியை மக்களிடம் நெருக்கமாக கொண்டு சென்றது]

## ரௌலட் சட்டம் (1919):

- 1919—ல் இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் படி சந்தேகத்தின் பேரில் விசாரணையின்றி எவரையும் கைது செய்யும் அதிகாரம் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டது.
- இச்சட்டம் **“கருப்புச்சட்டம்”** என்று கருதப்படுகிறது.
- இச்சட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்திய காந்தி டெல்லிக்கருகில் கைது செய்யப்பட்டார்.
- பஞ்சாப்பில் முக்கிய தலைவர்களான **“சத்யபால்”** மற்றும் **“சைபுதீன் கிச்லே”** இருவரும் அமிர்தசரசில் கைது செய்யப்பட்டனர்.

## ஜாலியன் வாலாபாக் படுகொலை (1919, ஏப்ரல் 13):

- பஞ்சாப்பில் கைது செய்யப்பட்ட சட்டத்திற்கு புறம்பான இக்கைதினை எதிர்த்து மக்கள் அமிர்தசரசிலுள்ள **“ஜாலியன் வாலாபாக்”** என்னுமிடத்தில் பைசாகி என்ற அறுவடைத் திருநாளன்று பூங்கா

ஒன்றில் கூடினர். அப்பூங்கா ஒருபக்கம் சிறு நுழைவு வாயிலையும் மற்ற பக்கங்கள் உயர்ந்த சுவர்களையும் கொண்டிருந்தது.

- அமிர்தசரசின் இராணுவத் தளபதியான **"ஜெனரல் டயர்"** அவ்விடத்திற்கு விரைந்து வந்து வாயிற் கதவை மூடிவிட்டு சுடும்படி உத்தரவிட்டார்.
- 1919 ஏப்ரல் 13—ல் நடைபெற்ற இத்துயரச் சம்பவத்தில் சுமார் 500 பேர் இறந்தனர். 1200—க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.
- இது **ஜாலியன் வாலாபாக் படுகொலை (அ) பஞ்சாப் படுகொலை (அ) அமிர்தசரஸ் படுகொலை** என்றழைக்கப்படுகிறது.
- இந்நிகழ்ச்சியால் ஆத்திரமடைந்த காந்தி முழு மூச்சாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.
- இப்படுகொலையைக் கண்டித்து ரவீந்தரநாத் தாகூர் ஆங்கில அரசு தனக்கு அளித்த **"நைட்வுட்"** (Knighthood) பட்டத்தை துறந்தார்.
- தென்னாப்பிரிக்காவில் தனக்களிக்கப்பட்ட **"கெய்சர்—இ—ஹிந்த்"** (Kaiser-i-Hind) என்ற பதக்கத்தை திருப்பி அளித்தார்.
- C.F. ஆண்ட்ரூஸ் என்பவர் இப்படுகொலையைப் பற்றி மகாதேவ் தேசாய்க்கு கீழக்கண்டவாறு **"அது ஒரு படுகொலை, ஒரு கொலைக்களம்"** என்று எழுதினார்.

## கிலாபத் இயக்கம் (1920):

- முதல் உலகப்போரின் முடிவில் ஏற்பட்ட **"செவ்ரஸ்"** உடன்படிக்கை துருக்கியை மிகவும் பாதித்தது. துருக்கிய சுல்தான் ஆங்கிலேயரால் அவமதிக்கப்பட்டார். (சுல்தான் முஸ்லீம்களின் மதத்தலைவர் **"காலிபா"** ஆவார்). எனவே ஆங்கிலேயருக்கு எதிராக உலகம் முழுவதும் இவ்வியக்கம் தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் இவ்வியக்கத்தை அலி சகோதரர்கள் (முகமது அலி, சவுகத் அலி) தோற்றுவித்தனர்.
- இந்து—முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக காந்தி இதனை ஆதரித்தார்.

## ஒத்துழையாமை இயக்கம் (1920):

- 1920, டிசம்பரில் நடைபெற்ற **"நாக்பூர்"** மாநாட்டில் காங்கிரஸ் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது.
- இவ்வியக்கம் மூன்று நிலைகளாக நடைபெற்றது.
    1. முதலாவதாக இந்தியர்கள் ஆங்கில அரசிடமிருந்து பெற்ற பட்டங்களையும், விருதுகளையும் துறந்தனர்.
    2. இரண்டாவதாக கடையடைப்பு உள்ளிட்ட பெரும் போராட்டங்களை நடத்தனர். பள்ளிகள், கல்லூரிகள், சட்டமன்ற நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன. (இதில் மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, சி.ஆர். தாஸ், ராஜாஜி, பெரியார் உட்பட சுமார் 30,000 பேர் கைது செய்யப்பட்டனர்).
    3. இறுதிக் கட்டமாக வரி செலுத்த மறுத்தனர்.

## சௌரி சௌரா நிகழ்ச்சி (1922, பிப்ரவரி 5):

- உத்திரப்பிரதேசத்திலுள்ள "சௌரி சௌரா" என்னுமிடத்தில் காவலர்களின் அடக்குமுறைக்கு எதிராக விவசாயிகள் காவல் நிலையத்திற்கு தீயிட்டனர்.
- அதில் 22 காவலர்கள் உயிரிழந்தனர். அந்நிகழ்ச்சி சௌரி சௌரா நிகழ்ச்சி எனப்படுகிறது.
- இச்சம்பவத்தால் மனம் வருந்திய காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை கைவிட்டார்.
- ஆங்கில அரசு காந்தியைக் கைது செய்து 6 ஆண்டுகள் சிறையில் அடைத்தது.

## சுயராஜ்யக் கட்சி (1923–25):

- காந்திஜியின் கைதுக்குப் பின் வழிநடத்த சரியான தலைவர் இல்லாததால் அலிப்பூர் சிறையிலிருந்த மோதிலால் நேருவும், சி.ஆர். தாசும் 1923–ல் சுயராஜ்யக் கட்சியை நிறுவினர்.
- 1925–ல் சி.ஆர். தாசின் மறைவுக்குப் பின் அக்கட்சியும் மறைந்தது.

## சைமன் குழு (1927):

- 1927–ல் 7 பேர் கொண்ட ஒரு குழு **"சர் ஜான் சைமன்"** தலைமையில் இந்திய அரசியல் நிலையை ஆராய அமைக்கப்பட்டது.
- இதில் இந்தியர்கள் யாரும் இல்லாததால் இக்குழுவைப் புறக்கணித்து **"சைமனே திரும்பிப்போ"** (Simon, GO back) என்ற முழக்கத்துடன் எதிர்ப்பைக் காட்டினர்.

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net

- இப்போராட்டத்தில் ஈடுபட்ட **"லாலா லஜபதிராய்"** (பஞ்சாப் சிங்கம்) போலீஸ் தடியடிபட்டு இறந்தார். இதற்கு காரணமான காவலரை (சாண்டர்ஸ்) பகத்சிங் சுட்டுக் கொன்று பழி தீர்த்துக் கொண்டார்.
- இக்குழு 1929—ல் சென்னைக்கு வந்தது.
- 1930—ல் சைமன் குழு தனது அறிக்கையை வெளியிட்டது.
- 1935—ஆம் ஆண்டு சட்டத்திற்கு இக்குழுவின் அறிக்கை அடிப்படையாக விளங்கியது.

## நேரு அறிக்கை (1928):

- இங்கிலாந்து வெளியுறவுச் செயலர் **"பிர்கன்ஹெட்"** என்பவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியலமைப்பை உருவாக்க முடியுமா என்று இந்தியர்களுக்கு சவால் விடுத்தார்.
- இந்த சவாலை ஏற்ற காங்கிரஸ் 1928, பிப்ரவரி 28—ல் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டி 8 பேர் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவராக **"மோதிலால் நேரு"** செயல்பட்டார். இக்குழுவின் அறிக்கையே **"நேரு அறிக்கை"** எனப்படுகிறது.

அதன் சிறப்புக்கள் பின்வருமாறு.

1. நிலையான டொமினியன் அந்தஸ்து வழங்கப்படுதல்
2. மத்தியில் முழுப் பொறுப்பு வாய்ந்த அரசு
3. மாகாணங்களுக்கு சுயாட்சி
4. மத்தியில் இரண்டு அவைகள் கொண்ட சட்டமன்றம்.

## ஜின்னாவின் 14அம்சஅறிக்கை: (1929, மார்ச் 31)

- நேரு அறிக்கை முஸ்லீம் நலனுக்கு எதிரானது என்று ஜின்னா கருதினார். அகில இந்திய முஸ்லீம் மாநாட்டைக் கூட்டிய ஜின்னா, தனது 14 அம்சக் கோரிக்கைகளை வெளியிட்டார்.

## லாகூர் காங்கிரஸ் மாநாடு (1929):

- 1929—ல் ஜவஹர்லால் நேரு தலைமையில் இம்மாநாடு கூடியது.
- முழு விடுதலை அல்லது பூரண சுதந்திரம் கோரி தீர்மானம் இயற்றப்பட்டது.

- மேலும் சட்டமறுப்பு இயக்கத்தை ஆங்கிலேயருக்கு எதிராக நடத்துவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.
- **டிசம்பர் 31, 1929** நள்ளிரவில் வந்தேமாதரம் பாடலுக்கிடையே ராவி நதிகரையில் மூவர்ணக்கொடி ஏற்றப்பட்டது.
- தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26—ஆம் நாள் சுதந்திர தினமாக அனுசரிக்கப்பட வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி **1930, ஜன.26** ஆம் நாள் நாடு முழுவதும் **சுதந்திர தினமாகக்** கொண்டாடப்பட்டது.
- இந்திய வரலாற்றில் அந்த நல்ல நாளினை நினைவு கூர 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26—ஆம் நாளை குடியரசு தினமாகக் கொண்டாடி வருகிறோம்.

## சட்டமறுப்பு இயக்கம் (1930—34):

### உப்பு சத்தியக்கிரகம்

- 1930, மார்ச் 12—ல் காந்தி புகழ்மிக்க தண்டிப் பயணத்தை தொடங்கினார். ஏப்ரல் 6—ஆம் தேதி தண்டியை அடைந்து அக்கடற்கரையிலிருந்த உப்பை தன் கையால் எடுத்து சட்டத்தை மீறினார்.
- **சபர்மதி ஆசிரமத்திலிருந்து** (அகமதாபாத்) **தண்டி** வரையுள்ள 241 மைல்கள் (400 கி.மீ.) தூரத்தை சரோஜினி நாயுடு உள்பட 78 ஆதரவாளர்களுடன் 25 நாள்களில் கால்நடையாக காந்தி பயணம் செய்தார். பயணத்தின் போது **"வந்தே மாதரம்"** என்ற முழக்கம் நாடெங்கும் எதிரொலித்தது.
- தமிழ்நாட்டில் (தென்னிந்தியாவில்) **ராஜாஜி** திருச்சியிலிருந்து வேதாரண்யம் கடற்கரைக்கு சென்று உப்புக் காய்ச்சினார்.
- மலபார் கடற்கரையில் **"கேளப்பன்"** என்பவர் **கோழிக் கூட்டிலிருந்து பையனூர்** வரை சென்றார்.
- வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களில் **"எல்லைக் காந்தி"** என்றழைக்கப்பட்ட **"கான் அப்துல் காபர்கான்"** தலைமையேற்று வழிநடத்தினார்.
- இப்போராட்டத்தில் ஈடுபட்ட **காந்திஜி, நேருஜி, ராஜாஜி** போன்ற முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

SAMPLE PDF - 9442738785 www.Padasalai.Net

## வட்ட மேஜை மாநாடுகள் (1930—32):

## முதல் வட்டமேஜை மாநாடு (1930):

- சட்டமறுப்பு இயக்கத்தை அடக்க முடியாமல் இந்தியர்களை சமாதனப்படுத்தும் வகையில் ஆங்கில அரசு லண்டனில் 1930—ல் முதல் மாநாட்டை கூட்டியது.
- காங்கிரஸ் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.



VIDYA SRI COACHING CENTRE - 9442738785 STUDY MATERIALS PG - TRB

## KARAIKUDI VIDYA SRI



# TEST BATCH
# AVAILABLE-2024
# ONLINE
# OFF LINE

SAMPLE PDF
www.Padasalai.Net

KARAKUDI VIDYA SRI SAMPLE MATERIALS
447 PASSED TILL DATE 8015513365 PG TRB / TET PAPER I & II / TNPSC / PSYCHOLOGY
www.vidyasriacdaemy.com


HAPPY NEW YEAR 2024
NEW BATCH 2024
TNPSC
தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்
குரூப் - 4 & VAO
குரூப் - 2 , 2A
10th , +2 Degree
படித்திருந்தால் போதும்
நீங்கள் அரசு அதிகாரியாகலாம்
இதுவரை
447
பேர் தேர்ச்சி
கிராம நிர்வாக அலுவலர் (VAO)
இளநிலை உதவியாளர் (JA)
வரிதண்டலர் (Bill Collector)
நில அளவர் (Surveyor)
தட்டச்சர் (Typist)
Fees
6,000 Only
(Class + Free Study Material + Free Test)
Online & Offline Class
For Admission
8015513365 / 9442738785
vidyasrieducation@gmail.com
www.vidyasriacademy.com
KARAIKUDI VIDYASRI COACHING CENTER, 4,MAHARISHI SCHOOL NEAR
INCOME TAX STOP,KARAIKUDI-01

# KARAIKUDI

# VIDYA SRI COACHING CENTRE

## ONLINE CLASSES FOR

## PG – TRB

## (PHY, ECO, ZOO, BOT, ENG, TAM, MATHS, PSYCHOLOGY )

## TIME – 8.00 – 9.30 PM

## WEEKLY – 5 DAYS

விருப்பம் உள்ள மாணவர்கள் கீழ்காணும் எண்ணை தொடர்பு கொள்ளவும்.

# 8015513365, 9442632093

## CLASSES OFF LINE

## SAT, SUN - 9.30 – 5.00

SAMPLE PDF - 9442738785
www.Padasalai.Net

